**IN THE COURT OF THE SESSIONS JUDGE, FAST TRACK MAHILA COURT, VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**Spl. S.C. No. 01 / 2018**

**Dated : 07.09.2018**

**Deposition of witness for : P.W. 5**

| | |
|---|---|
| பெயர் - திரு. முத்து | ஜாதி : |
| த / பெ - | சமயம் - |
| கிராமம் : | தொழில் - |
| தாலுகா : | வயது - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**முதல் விசாரணை -**

நான் தற்போது மதுரை மாவட்டம் நாகமலைப்புதுக்கோட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 02.09.2016ம் தேதி நான் இருக்கன்குடி வட்ட காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது இருக்கன்குடி காவல்நிலைய குற்றஎண் 183 / 16 வழக்கில் சார்பாய்வாளர் சுமதி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வைத்திருந்ததை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினம் 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நீராத்திலிங்கம் , சண்முகையா , முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ 4. வரைபடம் அ.சா. ஆ 5. அன்றைய தினமே சாட்சிகள் அமுதா, அர்ஜீனன் மகன் இருளப்பசாமி, பாலசுப்பிரமணியன் மகன் இருளப்பசாமி, பூச்சையன் மகன் இருளப்பசாமி, இசக்கிமுத்து, இசக்கிராஜ் ,ரத்தினகுமார், ஈஸ்வரன் எதிரியின் தகப்பனார் ஆறுமுகம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.10.2016ம் தேதி பெண் சார்பாய்வாளர் சுமதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இளையராணியையும் எதிரி திருக்குமரனையும் என் முன்னிலையில் ஆஜர்படுத்தினார். பெண் சார்பாய்வாளர் முன்னிலையில் கடத்தப்பட்ட இளையராணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் அன்றைய தேதியிலேயே வழக்கின் சட்டப்பிரிவை 366 - A லிருந்து இதச பிரிவுகள் 366 -A, 376 , r/w 5 (l) 7, 8 மற்றும் 18 POCSO Act 2012 படி மாறுதல் செய்து மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 6. எதிரி திருக்குமரனை அன்றைய தினம் 18.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். இளஞ்சிறுமி இளையராணியை பெண் தலைமை காவலர் 1035 திருமதி. சுப்புலட்சுமி மூலம் மருத்துவ பரிசோதனைக்கு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு

அனுப்பினேன். அவரை பரிசோதித்த டாக்டர். முனிராவை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் இளையராணிக்கு கொடுத்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ 7 ஆகும். 21.10.2016ம் தேதி எதிரியை மருத்துவ பரிசோதனை செய்ய நீதிமன்றம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து தகுந்த காவலர் மூலம் மருத்துவ பரிசோதனைக்கு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினேன்.எதிரி திருக்குமரனை பரிசோதனை செய்த மருத்துவர் அமர்நாத்தை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் எதிரிக்கு கொடுத்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ 8. 24.10.2016ம் தேதி சாட்சி மரியதாஸை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட இளஞ்சிறுமி இளையராணியிடம் குவிமுச பிரிவு 164ன் கீழ் வாக்குமூலம் பெறுவதற்கு வேண்டுகோள் கடிதத்தை சார்பாய்வாளர் சுமதி மூலம் நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்டு 25.10.2016ம் தேதி விருதுநகர் நீதித்துறை நடுவர் எண் -1ல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 164 குவிமுச பிரிவு வாக்குமூலம் அ.சா.ஆ 9 ஆகும். பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட இவ்வழக்கின் தடய பொருட்களை ஆய்விற்கு அனுப்பினேன். சாட்சிகள் காவலர்கள் ராஜீவ்காந்தி, மாதவன் , பசுபதி , சுப்புலட்சுமி, சார்பாய்வாளர் சுமதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கானது பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்ட வழக்காக இருப்பதால் இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கின் கோப்பை மேல் விசாரணைக்காக சாத்தூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் கீதாரமணியிடம் விசாரணைக்கு அனுப்பி வைத்தேன். அவருடைய கையெழுத்துக்கள் எனக்கு தெரியும் . அவர் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.10.2016ம் தேதி தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் விஜயேந்திரனை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் கொடுத்த உயிரியல் அறிக்கை அ.சா.ஆ 10. குருதிவடிநீரியல் அறிக்கை அ.சா.ஆ 11 ஆகும். பிறகு 20.12.2016ம் தேதி தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் விஜயேந்திரனை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே இவ்வழக்கில் குற்ற செயல்களில் ஈடுபடாத மற்ற எதிரிகளான பாபு , சேகர், சிலிண்டர் முருகன் ஆகியோர்களை நீக்கம் செய்து அறிக்கையை ஸ்ரீவில்லிபுத்தூர் மகிளா நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பிறகு 21.12.2016ம் தேதி தலைமையாசிரியர் துரைராஜை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கொடுத்த பிறந்த தேதி குறித்த சான்றிதழ் அ.சா.ஆ 12 ஆகும். பின்பு சாட்சிகள் ராஜா, ஆறுமுகம், மாடசாமி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு

02.02.2017ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 366 -A, 376 , r/w 5 (l) 7, 8 மற்றும் 18 POCSO Act 2012 லிருந்து 366 இதச மற்றும் 7, 8 3 r/w 4 ,5(l) r/w 6 POCSO Act 2012 மற்றும் Sec 9 Child Marriage Act 2006ன் கீழ் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 13 ஆகும். பிறகு அதே தினத்தில் வழக்கில் புலன் விசாரணையை முடித்து எதிரி திருக்குமரன் மீது 366 இதச மற்றும் 7, 8 3 r/w 4, 5(l) r/w 6 POCSO Act 2012 மற்றும் Sec 9 Child Marriage Act 2006ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். போலீசாரின் விசாரணையில் சாட்சிகள் இளையராணி, அமுதா, அர்ஜீனன் மகன் இருளப்பசாமி ஆகியோர் நடந்த உண்மை சம்பவத்தை கூறியுள்ளார்கள்.

**கு.வி -**

வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**அமர்வு நீதிபதி,**
**விரைவு மகளிர் நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**